DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM

<table>
<tr><td colspan="3">Case No</td><td>:</td><td colspan="3">S.C : 213/2017</td></tr>
<tr><td colspan="3">Prosecution Witness</td><td>:</td><td colspan="3">PW - 9</td></tr>
<tr><td>Name</td><td>:</td><td colspan="2">திரு. காமராஜ்</td><td rowspan="2">Occupation</td><td rowspan="2">:</td><td rowspan="2">விவசாய கூலி</td></tr>
<tr><td>Father's Name/ Husband</td><td>:</td><td colspan="2">தனவேல்</td></tr>
<tr><td>Village</td><td>:</td><td colspan="2">வீராஞ்சேரி</td><td rowspan="2">Age</td><td rowspan="2">:</td><td rowspan="2">37</td></tr>
<tr><td>Taluk</td><td>:</td><td colspan="2"></td></tr>
</table>

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 23rd day of January 2026. 23-01-2026

(1 ஆம் எதிரி காவலில் உள்ளார் . எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் . எதிரி 2 ஆஜரில்லை. 2 ஆம் எதிரி சார்பில் BNSS பிரிவு 355 இன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை**

நான் வீராஞ்சேரியில் வசித்து , விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 முதல் அ .சா.3 வரை தெரியும் . என் ஊரை சேர்ந்தவர்கள். 17/01/2017 ஆம் தேதி பொங்கல் விழா போட்டி நடந்தது . 18/01/2017 அன்று பரிசளிப்பு விழா நடந்தது . அந்த போட்டிக்கு விழா கமிட்டி தலைவராக நான் இருந்தேன் . முருகானந்தத்தின் மகன் அருள்குமார் போட்டியில் கலந்துக்கொண்டு , பரிசுகள் வாங்கினார் . அதன்பின்னர் பாட்டு போட்டு டான்ஸ் ஆடினார்கள் . அங்கிருந்த போட்டியில் கலந்துக்கொண்ட எல்லோருமே ஆடினார்கள் . அவ்வாறு ஆடியவர்களுக்கு சரவணன், பொன்னுசாமி ஆகியோர் 10 ரூபாய் பணம் குத்தினார்கள். இறந்து போன அருள்குமாருக்கு அவ்வாறு பணம் ரூபாய் 10 பொன்னுசாமி, சரவணன் குத்தினார்கள். கடைசியாக இறந்து போன அருள்குமாரை நான் பரிசளிப்பு போட்டியில் சரவணன் , பொன்னுசாமியுடன் தான் பார்த்தேன். போட்டி முடித்து நாங்கள் எல்லாம் வீட்டில் போய் படுத்துவிட்டோம். மறுநாள் காலை சத்தம் கேட்டு ஊரில்

பேசிக்கொண்டிருந்தது தெரிந்து வீராஞ்சேரி கருப்புசாமி கோவிலில் போய் பார்த்த போது அங்கிருந்த சூலத்தில் அருள்குமார் குத்தப்பட்டிருந்தார் . இறந்துகிடந்தார். பொன்னுசாமியின் தங்கச்சி கலைசெல்வி பக்கத்து ஊர் பையனை காதலித்து, ஓடிபோனதற்கு இறந்து போன அருள்குமார் தான் காரணம் என்று அவர் மீது பொன்னுசாமி கோபமாக இருந்தார் . இதனால் முன்விரோதம் அவர்களுக்குள் இருந்தது . கலைசெல்வி பொன்னுசாமியின் தங்கச்சி. போலிசார் இது சம்மந்தமாக விசாரித்தார்கள்.

**இரண்டாம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.**

போலிசார் ஊரில் வைத்து விசாரித்தார்கள் . தேதி நினைவில்லை. பொன்னுசாமி டான்ஸ் ஆடியவர்களுக்கு 10 ரூபாய் பணம் குத்தினார் என்ற விவரத்தை போலிசார் விசாரித்த போது சொன்னேன் . பொன்னுசாமி தங்கை திருமணமாகி எவ்வளவு நாட்கள் கழித்து இந்த சம்பவம் நடைபெற்றது என்று தெரியாது . பொன்னுசாமி தங்கைக்கு திருமணமான பிறகு பொன்னுசாமி குடும்பமும் , அவருடைய தங்கை குடும்பமும் ஒன்று சேர்ந்துவிட்டார்கள் என்றால் தெரியாது . இந்த காதலுக்கு இறந்து போன அருள்குமார் எந்த வகையில் உதவி பண்ணினார் என்று எனக்கு தெரியாது . அருள்குமார் இந்த காதலுக்கு உதவி செய்ததால் அவர்கள் மீது பொன்னுசாமிக்கு கோவம் என்று ஊரில் பேசிக்கொண்டார்கள் எனக்கு தெரியாது. ஆட்டம், பாட்டம் முடிந்த பிறகு பொன்னுசாமி எங்கே போனார் , இறந்தவர் எங்கே போனார் என்று தெரியாது. இறந்து போன அருள் குமார் அப்போது 5 வதோ, 6 வதோ படித்துக்கொண்டிருந்தார். சின்ன பையன். பொன்னுசாமியின் தங்கை காதலித்த பையன் தேவனோடை . அருள்குமார் ஊருக்கும் தேவனோடைக்கு எவ்வளவு தூரம் என்று தெரியாது . பொன்னுசாமியின் தங்கை காதலித்த பையனுக்கு என்ன வயது இருக்கும் என்று தெரியாது .

பொன்னுசாமியின் தங்கையை காதலித்த பையனும் அருள்குமாரும் நண்பர்கள் கிடையாது . எனக்கு தெரிந்து பொன்னுசாமி அருள்குமாருக்கும் வேறு எந்த விரோதமும் இல்லை என்றால் இந்த காதல் பிரச்சினை தான் வேறு இல்லை . இந்த காதல் பிரச்சினை சம்மந்தமாக என்னிடம் அருள்குமாரோ , அந்த காதலித்த நபரோ சொல்லவில்லை. அருள்குமாருக்கும் பொன்னுசாமிக்கும் இந்த காதல் பிரச்சினை தான் விரோதம் என்று யார் சொல்லி தெரிந்துக்கொண்டேன் என்றால் ஊரில் பேசிக்கொண்டார்கள். யார் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது. அருள்குமார் இறப்பதற்கு எவ்வளவு நாட்கள் முன்பு இந்த பிரச்சினை இருந்ததாக கேள்வி பட்டேன் என்றால் சுமார் 3, 4 மாதங்கள் முன்பாக கேள்விபட்டேன் . நான் ஊரில் விழா கமிட்டி தலைவர். இந்த விரோதம் சம்மந்தமாக நான் அருள்குமாரையோ பொன்னுசாமியையோ கூப்பிட்டு விசாரித்தேனா என்றால் இல்லை. இந்த விரோதம் பற்றி தெரிந்தவுடன் நான் போலிசாரிடம் இது குறித்து ஏதாவது தெரிவித்தேனா என்றால் இல்லை . நான் சொன்னவாறு அருள்குமாருக்கும் பொன்னுசாமிக்கும் எந்த விரோதமும் இல்லை என்றாலும், போலிசார் சொல்லிக்கொடுத்து இருவருக்கும் விரோதம் இருந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த விரோதம் பற்றி ஊரில் யாருக்கு தெரியும் என்றால் எல்லோருக்கும் தெரியும் . யாரென்று குறிப்பிட்டு சொல்ல முடியாது. போலிசார் சொல்லிக்கொடுத்து நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**முதல் எதிரி தரப்பில் இதே குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.**

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged

by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.